# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 156/நகராட்சி/2018**

**நாள் : 24/09/2018**

**திருமதி S. கலா,**
**ஆதம்பாக்கம்.**

**– முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**ஆவடி நகராட்சி,**
**மதுராந்தகம் நகராட்சி,**
**திருவொற்றியூர் நகராட்சி,**
**காஞ்சிபுரம் நகராட்சி.**

**– எதிர் மனுதாரர்**

சென்னை ஆதம்பாக்கம், எண்.100, பாலகங்காதர் தெரு முகவரியில் வசிக்கும் திருமதி S. கலா அவர்களின் 04.07.2018 நாளிட்ட முறையீட்டு மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 05.07.2018 அன்று பெறப்பட்டு 156/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரிடம் 12.09.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை ஆதம்பாக்கம், எண்.100, பாலகங்காதர் தெரு முகவரியில் வசிக்கும் திருமதி S. கலா என்பவர், தான் பணியாற்றிய கீழ்க்காணும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பணி ஓய்வுக்குப் பின் தனக்கு வழங்கப்பட வேண்டிய சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படுவதற்கு ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

| வ. எண். | உள்ளாட்சி அமைப்பின் பெயர் | பணியின் பெயர் | பணியாற்றிய காலம் |
|---|---|---|---|
| 1. | ஆவடி நகராட்சி | இளநிலை உதவியாளர் | 12.01.1983 – 02.12.1987 |
| 2. | மதுராந்தகம் நகராட்சி | இளநிலை உதவியாளர் | 27.10.1988 - 07.06.1993 |
| 3. | மண்டலம்–1, திருவொற்றியூர் சென்னை மாநகராட்சி | உதவியாளர் | 26.10.2007 – 28.12.2007 |
| 4. | காஞ்சிபுரம் நகராட்சி | கணக்கர் வகுப்பு II | 06.02.2010 - 06.04.2010 |

2. முறையீட்டு மனுதாரர் தனது 13.12.2017 நாளிட்ட முறையீட்டு மனுவிலும், தான் பணியாற்றிய ஆவடி நகராட்சி, சென்னை மாநகராட்சி அம்பத்தூர் மண்டலம், மதுராந்தகம் நகராட்சி மற்றும் ஆரணி நகராட்சி ஆகிய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து தனக்கு வழங்கப்பட வேண்டிய சேமநலநிதிக்கான வட்டித் தொகையினை வழங்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில்

முறையீடு செய்திருந்தார். மேற்குறிபிட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு, மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேமநலநிதிக்கான வட்டித் தொகையினை உடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 13.12.2017 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ ஆணை எண்.278/2017–இல் ஆணையிடப்பட்டது. மேற்குறிப்பிட்ட இம்முறைமன்ற நடுவ ஆணையினைத் தொடர்ந்து மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேமநலநிதிக்கான வட்டித் தொகை ஆரணி நகராட்சி ஆணையராலும், அம்பத்தூர் மண்டல அலுவலராலும் உடன் வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அலுவலர்களின் உடன் நடவடிக்கையை இம்முறைமன்ற நடுவம் பாராட்டுகிறது. எனினும், அம்பத்தூர் நகராட்சி மற்றும் மதுராந்தகம் நகராட்சியிலிருந்து மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய சேமநலநிதிக்கான வட்டித்தொகை வழங்கப்படாமலேயே உள்ளது. மதுராந்தகம் நகராட்சியைப் பொறுத்தமட்டில் 12.05.2016 நாளிட்ட கடிதம் எண்.1167/2014/ எச்1–இல் வட்டித் தொகை வழங்குவதற்கான உரிய கருத்துரு சென்னை, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கருத்துருவிற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் ஒப்புதலைப் பெற உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மதுராந்தகம் நகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

3. ஆவடி நகராட்சியில் முறையீட்டு மனுதாரர் 1983–1987–ஆம் ஆண்டுகளில் பணியாற்றியுள்ளார். சேமநலநிதி பதிவேடுகளை தேடுவதற்கு 30 நாட்கள் கால அவகாசம் வழங்கக்கோரி 18.01.2018 நாளிட்ட ஆவடி நகராட்சி ஆணையரின் கடிதம் எண்.1997/பி4/2017–இல் கோரப்பட்டது. ஒன்பது மாதங்கள் முடிந்த நிலையிலும், இம்முறைமன்ற நடுவத்தின் ஆணையினை ஏற்று சேமநலநிதிக்கான வட்டித் தொகையினை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளாதது மிகவும் கண்டிக்கத் தக்கது. எனவே, இது சம்பந்தமாக உடன் நடவடிக்கை மேற்கொண்டு உரிய அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு ஆவடி நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது. மேலும், சென்னை மாநகராட்சி, 1–வது மண்டல அலுவலரும், காஞ்சிபுரம் நகராட்சி ஆணையரும் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையினை பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆணையிடப்படுகிறது.

4. முறையீட்டு மனுதாரர் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற மூத்த குடிமகள். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்கள் கூட தங்களது கோரிக்கை குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்தால்தான் தீர்வு கிடைக்கும் என்ற வகையில் நகராட்சிகளின் செயல்பாடு இருப்பது பாராட்டத் தக்கதல்ல. எனவே, இதுபோன்ற நேர்வுகளில் மனித நேயத்துடன் செயல்பட்டு உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்கள் / சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர் மற்றும் செங்கல்பட்டு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோருக்கு அறிவுறுத்தப்பட்டு ஆணையிடப்படுகிறது.

**2018**– ஆம் ஆண்டு, **செப்டம்பர்** திங்கள், **24**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்

1 திருமதி S. [illegible],
எண்.100, பாலகங்காதர் தெரு,
**ஆதம்பாக்கம், சென்னை – 88.**

2 நகராட்சி ஆணையர்,
ஆவடி நகராட்சி,
ஆவடி.

3. நகராட்சி ஆணையர்,
மதுராந்தகம் நகராட்சி,
மதுராந்தகம்.

4. நகராட்சி ஆணையர்,
காஞ்சிபுரம் நகராட்சி,
காஞ்சிபுரம்.

5. மண்டல அலுவலர்,
மண்டலம் – 1,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.947, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
சென்னை – 600 019.

6. மண்டல நகராட்சிகளின் இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம்,
தாம்பரம், சென்னை – 600 045.

7. நகராட்சி ஆணையர்,
ஆரணி நகராட்சி,
ஆரணி,
வேலூர் மாவட்டம்.

8. மண்டல அலுவலர்,
மண்டலம் – 7,
பெருநகர சென்னை மாநகராட்சி,
திருவள்ளூர் நெடுஞ்சாலை,
டன்லப் எதிரில், சென்னை – 600 053.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி